## அத்தியாயம் 18

அபிராமி வினுவை கண்டித்து கொண்டிருந்தார். கீதாவுடன் வயலுக்கு செல்வேன் என்று அடம் பிடித்தவனை போக கூடாது என்று சொன்னதால் அவனுக்கு கோபம்.

" லுக் வினு! அந்த ப்ளேஸ் உனக்கு பழக்கம் இல்ல. டுமாரோ எல்லாரும் டெம்பிள் போய்ட்டு வர்ரப்போ உனக்கு அம்மா வயல காமிக்கிறேன். இப்போ அடம் பிடிக்காம கார்டன சுத்தி பாரு" என்று சொன்னவரை முறைத்து விட்டு அங்கு வந்த மீனாட்சியின் கையை பிடித்து கொண்டான்.

" கிரானி ப்ளீஸ் அலோவ் மீ டு கோ டு தேர். ஐயாம் நாட் எ கிட்" என்று சொன்னவனின் தலையை தடவி கொடுத்தவர் " இந்த தோட்டம் கூட ஒரு ஸ்மால் வயல் தாண்டா செல்லம். நம்ம ரெண்டு பேரும் சேந்து சுத்தி பாப்போமா?" என்று அவனை சமாதானப்படுத்தி கொண்டே அழைத்து சென்றுவிட்டார்.

அபிராமி நிம்மதி பெருமூச்சு விட்டு கொண்டு சமைப்பவர்களுக்கு உதவி செய்ய சென்றுவிட்டார்.

அங்கே வானதி " எப்பிடியோ நம்ம வருணுக்கு ஒரு நல்ல பொண்ணு அமைஞ்சிருக்கா! லோகேஷூக்கும் கீதா மாதிரி ஒரு வைஃப் கெடச்சா நம்ம காலத்துக்கு பிறகும் நம்ம பசங்க இதே மாதிரி ஒற்றுமையா இருப்பாங்கங்கிற நிம்மதி கெடைக்கும்" என்றார்.

அபிராமிக்கு இதை கேட்டதும் கீதாவை நினைத்து பெருமையாக இருந்தது. தன்னுடைய வளர்ப்பு பொய்க்கவில்லை என்று மகிழ்ந்தவர் அவர்களுடன் சுலபமாக கலந்து விட்டார்.

பெண்கள் அனைவரும் இவ்வாறு பேசிக் கொண்டிருக்க அங்கே வேணு கோபாலன் வருணை பற்றி பேசி சிலாகித்து கொண்டிருந்தார்.

" நாங்களே தேடினாலும் இப்பிடி ஒரு பையன் கெடச்சிருக்க மாட்டான். இன்னிக்கு காத்தால இந்த பொண்ண சமாதானப்படுத்த முடியாம நாங்க தவிச்சப்போ பகவான் அனுப்புன மாதிரி வந்தவன் நிமிஷத்துல அவள சரியாக்கிட்டான்., எங்களுக்கும் பழைய குடும்பத்த திருப்பி கொடுத்துட்டான் உங்க பிள்ளை"

சுவாமிநாதனுக்கு மகனை நினைத்து மனம் நிறைந்தது.

இவ்வாறு வீடே இருவரையும் மாற்றி மாற்றி புகழ்ந்து கொண்டிருந்தது.

---

வயலில் ஆட்டம் போட்டவர்கள் அப்படியே பொடிநடையாக பக்கத்தில் குமாரகோயிலுக்கு நடந்தே செல்ல தொடங்கினர். கீதா சிறுவயதில் தன் தாத்தாவுடன் அங்கு சென்றிருப்பதாக கூற மறுநொடியே வருண் அங்கே செல்லலாம் என்று அனைவரையும் அழைத்து கொண்டு நடக்க ஆரம்பித்தான். காரை வயலின் அருகிலேயே விட்டு விட்டு அவர்கள் அனைவரும் நடந்தே செல்ல முடிவெடுத்தனர்.

வருண் கீதாவின் கையை விடாமல் பிடித்து கொண்டே வருவதை கண்ட அனு " ஹலோ அண்ணா ரொம்ப ஓவரா போறேள்! அந்த கையை தான் கொஞ்சம் விடுங்களேன்" என்று கிண்டலடிக்க வருண் கையை விட்டுவிட்டு அவளை தோளுடன் அணைத்து கொண்டான்.

" வருண் எல்லாரும் பாக்கிறாங்கடா"

" சோ வாட்?? வேணும்னா நீயும் என் தோள்ல கை போட்டுக்கோ"

" அதுக்கு உன்னோட தோள் எனக்கு எட்டணுமே! சரியான பனைமரம்! " என்று அவனை கிண்டலடித்தாள் கீதா.

" ஓ! பேசாம நான் உன்ன தூக்கிக்கவா?" என்று அவன் கூறியதும் ரியாவும் யோகாவும் அவினாஷையும் விக்னேஷையும் முறைத்தவாறே நடக்க அனுவும் பிரியாவும் சத்தமாக சிரிக்க ஆரம்பித்தனர்.

" டேய் மச்சி! காதல் தலைக்கேறி நீ ஏதாச்சும் பண்ணுற., இங்க என்னோட ஆளு என் கிட்டயும் அத எக்ஸ்பெக்ட் பண்றாடா., இப்போ நீ கீத்துவ தூக்குனா இவளும் என்னை தூக்க சொல்லுவா., கொஞ்சம் கருணை காட்டுடா" என்று பரிதாபமான குரலில் விக்னேஷ் கூறவும் யோகா அவனை கையிலிருந்த பர்ஸால் அடிக்க ஆரம்பித்தாள்.

வருணும் கீதாவும் சிரித்து கொண்டே கைக்கோர்த்தபடி நடந்து கொண்டிருந்தனர். அப்போது வருண் ஏதோ கேலி செய்ய அவனை அடிக்க கீதா முயலவும் அவன் ஓட ஆரம்பித்தான்.

அவன் பின்னே சென்ற கீதா அங்கு வந்த பைக்கை கவனிக்க தவறினாள். அதை கவனித்த வருண் அது கீதாவின் மீது மோதுவதற்கு முன் அவளை ஓடி வந்து தன் அருகில் இழுத்து கொண்டான். பைக்கிலிருந்து இறங்கிய ஒருவன் கோபத்துடன் இருவரையும் பார்த்தான்

அது ஒன்வே என்பதால் வாகனங்கள் செல்ல அனுமதி கிடையாது. எனவே தவறு அவன் மீது தான். இதில் தங்களை முறைக்க என்ன இருக்கிறது என்று பதிலுக்கு வருணும் அவனை கடினமான முகத்துடன் பார்த்தான். இருந்தாலும் கீதா அந்த பைக்கில் வந்தவனிடம் " சாரி சார்., நான் தெரியாம குறுக்க வந்துட்டேன்., ஐயாம் ரியலி சாரி" என்று பொறுமையாக மன்னிப்பு வேண்டினாள்.

ஆனால் அவனோ ஹெல்மெட்டை கழட்டி விட்டு " உனக்கு அறிவு இல்ல. இது என்ன ப்ளேகிரவுண்டா?? ஓடி பிடிச்சு விளையாடுறதுக்கு?" என்று தன் தவறை ஒத்துக் கொள்ளாமல் கத்தினான்.

வருணுக்கு யாரோ ஒருவன் கீதாவிடம் அந்த குரலில் பேசுவதை கேட்டு ஜிவுஜிவென்று கோபம் ஏற ஆரம்பித்தது.

" ஹேய்! நீ ராங் ரூட்ல வந்திட்டு எதுக்கு அவளை திட்டுற?" என்று பல்லை கடித்தபடி கேட்டான்.

" ஓ! அங்க சொன்னா இங்க எரியுதா? அப்பிடி தான்டா பேசுவேன். இது என்ன உங்க அப்பன் போட்ட ரோடா"

"ஹவ் டேர் யூ ?? இதுக்கு மேல உனக்கு மரியாதை கெடயாது" என்று வருண் அவன் சட்டையின் காலரை பிடிக்க அவனும் வருணின் சட்டையை பிடித்தான்.

கீதா இதை கண்டதும் அதிர்ச்சியில் " வருண் சண்ட போடாத ப்ளிஸ்., அவன விடு" என்று அவர்களை விலக்கிவிட முயற்சித்தாள்.

" கேர்ள் ஃப்ரெண்டோட நீ ரொமான்ஸ் பண்றதுக்கு உனக்கு வேற ப்ளேஸே கெடைக்கலையாடா?

" யூ ஹேவ் கிராஸ்ட் யுவர் லிமிட்ஸ்" என்று சொன்ன வருண் அவனை தள்ளிவிட கீழெ விழுந்தவன் எழுந்து வருணின் முகத்தில் தாக்க அவனும் பதிலுக்கு இவனை புரட்டி எடுத்தான்.

இதில் கீதாவின் குரல் அவனது காதை எட்டவில்லை. அவனை விலக்கி விட வந்தவளை கண்டு கொள்ளாமல் கோபத்தின் உச்சியில் அந்த பைக் காரனை புரட்டி எடுத்தவன் பக்கத்தில் கிடந்த அவனது ஹெல்மெட்டை எடுத்து அவனை அடிக்க செல்லவும் கீதா அவனது கையை பிடித்து " ஸ்டாப் இட் வருண்" என்று கோபமாக கத்தியபிறகு தான் அவன் அமைதியானான்.

கையிலிருந்த ஹெல்மெட்டை கோபத்துடன் தூக்கி எறிந்தவன் " இனிமே உன் லைஃப்ல எந்த பொண்ணையும் நீ கேலியா பேசவே கூடாது" என்று அவனிடம் மிரட்டும் தொனியில் சொல்ல கீழே கிடந்தவன் எழுந்து வருணையும் கீதாவையும் முறைத்து கொண்டே பைக்கை ஸ்டார்ட் செய்து சென்றுவிட்டான்.

அவன் சென்றதும் கீதா கோபத்துடன் " வாட் இஸ் திஸ் வருண்?? ஏன் இப்பிடி ரவுடி மாதிரி பிஹேவ் பண்ணுற? இந்த சின்ன விஷயத்துக்கு இவ்ளோ கோவப்பட வேண்டிய அவசியம் என்ன இருக்கு?" என்று அவனை பார்த்து கேட்டாள்.

அங்கே நடந்த சண்டையின் சத்தம் கேட்டு வந்த அவர்களின் நண்பர்கள் அங்கே கோபத்துடன் நின்ற கீதாவையும் அவள் முன்னே முகத்தில் சிராய்ப்புடன் அவளை விட அதிக கோபத்துடன் நின்ற வருணையும் பார்த்து விட்டு அவர்கள் அருகில் வேகமாக சென்றனர்.

" நான் அப்பிடி தான் பிஹேவ் பண்ணுவேன். என் கண்ணு முன்னாடி ஒருத்தன் உன்னை இப்பிடி பேசினதுக்கு அவன அடிச்சதோட விட்டேனு நீ சந்தோசப்படு. நீ இடைல வராம இருந்திருந்தா நான் அவன கொலையே பண்ணிருப்பேன்"

" கொலை பண்ணிட்டு என்ன பண்ணுவ?? ஜெயிலுக்கு போவியா?? கொஞ்சமாச்சும் யோசிச்சு பேசு வருண்"

" ஏய்! என் இடத்துல எவன் இருந்தாலும் இப்பிடி தாண்டி நடந்துப்பான்"

" மத்தவங்க பத்தி எனக்கு கவலை இல்ல வருண். நீ இந்த மாதிரி கோவப்படுறத பாத்தா எனக்கு பயமா இருக்கு. ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் ஆங்கர். இவ்ளோ கோவம் நல்லது இல்ல வருண்"

" சோ உனக்கு அவன் உன்ன அப்பிடி பேசுனது ப்ராப்ளம் இல்ல., நான் கோவப்பட்டது தான் பிரச்சனை "

" அப்பிடி இல்ல வருண்" என்று சொல்லிக் கொண்டே வருணின் கையை பிடிக்க செல்ல அவன் அவளது கையை தட்டி விட்டு லோகேஷுக்கு கால் செய்தான்.

" லோகேஷ்., நான் காரை வயல் பக்கமா பார்க் பண்ணிட்டு வந்துருக்கேன். நீ குமாரகோயில் வந்து எங்கள பிக் அப் பண்ணிக்கோ" என்று சொல்லிவிட்டு அவினாஷை பார்த்து " எல்லாரும் ரெடியாகுங்க! இப்போ நம்ம வீட்டுக்கு போகப் போறோம்" என்று சொல்லிவிட்டு கீதாவை விட்டு தள்ளி சென்று நின்று கொண்டான்.

லோகேஷ் வந்து அவர்களை அழைத்து செல்லும் வரை இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை. வீட்டுக்கு வந்தவர்கள் யாரிடமும் பேசிக் கொள்ளாமல் இருக்க கீதா தான் வீட்டுக்கு கிளம்புவதாக கூறி சென்று விட்டாள்.

வருணோ தான் அவளுக்காக ஒவ்வொன்றையும் செய்தாலும் கடைசியில் தன்னை அவள் புரிந்து கொள்வதே இல்லை என்ற மனத்தாங்கலுடன் இருந்ததால் அறையை விட்டு வெளியேறவே இல்லை. அதனால் கீதா சென்ற விஷயம் அவன் அறியவில்லை.

அபிராமி வினுவின் சத்தம் கேட்டு கொண்டிருந்ததால் கீதாவும் அங்கே தான் இருப்பாள் என்று எண்ணியவன் மாலையில் தான் காபி குடிக்க அறையை விட்டு வெளியே வந்தான். அங்கு கீதா இல்லாததை கண்டவன் அவளை தேட அனு அவள் மதியமே கிளம்பி சென்று விட்டதாகவும் தானே பஸ்ஸில் செல்வதாக கூறியதாகவும் சொல்ல வருணால் எதையும் யோசிக்க இயலவில்லை.

அவர்களின் சண்டையை மீனாட்சியிடம் மறைக்காமல் சொன்னான் ஜேசி. அபிராமி தங்கள் வீட்டிற்கு அனைவரையும் அழைக்க மீனாட்சி அம்மாள் அதை தன் திட்டத்திற்கு பயன்படுத்தி கொண்டார்.

" அதுவும் சரி தான் அபி. எல்லாரும் ரெடியாகுங்க. இன்னிக்கு நம்ம கண்ணனோட வீட்டில தான் தங்க போறோம். அப்பிடியே நாளைக்கு திருமலைகோயில் யாகத்துக்கு போயிட்டு நாளைக்கு நைட் வீட்டுக்கு

திரும்பறோம்" என்று கட்டளையிடவும் அனைவரும் ஒருநாளுக்கு தேவையான டிரஸை பேக் செய்து விட்டு காரில் கிளம்பினர்.

வருணுக்கு கீதா எந்த மாதிரி மனநிலையில் இருப்பாளோ என்ற கவலை. வீட்டை அடையும் வரை அவன் எதுவும் பேசவில்லை.

வீட்டின் முன் கார் நின்றதும் இறங்கியவர்கள் பார்க்கிங்கில் இன்னொரு கார் நின்று கொண்டிருக்கவும் அபிராமியும் கண்ணனும் வேணுகோபாலனை பார்க்க அவரோ " இவன் இங்கயும் வந்துட்டானா?? ஐயோ கொழந்தை வேற தனியா இருந்தாளே" என்று சொல்லவும் அனைவரும் பதறி அடித்து உள்ளே சென்றனர்.

அந்த பெரிய ஹாலின் நடுவில் இருந்த சோஃபாவில் நடுநாயகமாக அமர்ந்திருந்த கீதாவையும் அவளின் இருபுறமும் அமர்ந்திருந்த அந்த பெண்மணிகளும் யார் வந்திருப்பது என்று பார்க்கும் போது வாசலில் நின்றவர்களை பார்த்தவர்கள் புன்னகைத்தனர்.

அங்கே பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவர் வேணு கோபாலனை பார்த்து " சித்தப்பா வாங்க வாங்க" என்று வரவேற்கவும் அனைவரும் உள்ளே வந்தனர்.

உள்ளே வருணின் பார்வை வரவேற்றவரின் பக்கத்தில் தலையில் பேண்டேஜுடன் அமர்ந்திருந்தவனின் மீது விழ அவனை பார்த்தவனால் கோபத்தை அடக்க முடியவில்லை. அவன் தான் அவர்களிடம் மோதிய அந்த பைக் காரன்.

அந்த வரவேற்ற நபர் வருணின் குடும்பத்தை பார்த்து விட்டு " இவங்க எல்லாரும் யாரு?" என்று கீதாவிடம் கேட்க வேணு கோபாலன் " அவங்க எல்லாரும் கீதாவோட புகுந்த வீட்டு காரங்க" என்றார் பெருமையுடன்.

அவர் அப்படி கூறியதும் அங்கிருந்த வருணின் குடும்பத்தாருக்கு சந்தோசம் என்றால் புதிதாக வந்திருந்த அந்த குடும்பத்துக்கு முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல ஆனது.

வருண் அந்த பைக்கில் வந்தவனின் முகத்தில் வந்த அதிர்ச்சியை சந்தோசமாக பார்த்துவிட்டு எழுந்து கீதாவின் இருபுறமும் அமர்ந்திருந்த அந்த பெண்மணிகளை பார்த்து " இஃப் யூ டோண்ட் மைண்ட், நீங்க ரெண்டு பேரும்

கொஞ்சம் அங்க மாறி உக்காந்துக்க முடியுமா?" என்று சொல்லவும் அவர்கள் சென்று அவரவர் கணவன்மார் அருகில் அமர்ந்தனர்.

கீதாவின் அருகில் அமர்ந்தவன் அவளின் தோளில் கை போட்டு " ஐயாம் வருண்! நானும் கீதாவும் தான் கல்யாணம் பண்ணிக்க போறோம் " என்று சொல்லிவிட்டு பைக்கில் வந்தவனை பார்த்து அர்த்தம் நிறைந்த சிரிப்பை பரிசாக அளித்தான். கீதாவோ ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

அவனும் அவன் குடும்பத்தாரும் இதை எதிர்பார்க்கவில்லை போலும்.

" இங்க பாருங்க நரசிம்மன்., இந்த வீடும் இதோட சேந்த சொத்துகளும் அருணாச்சலத்தோட வாரிசுக்கு தான் போய் சேரணும்னு கோர்ட்டே தீர்ப்பு குடுத்தாச்சு. இப்போ நீங்க குடும்பத்தோட இங்க வர வேண்டிய அவசியம் என்ன?" என்று குத்தலாக கேட்டார் வேணுகோபாலன்.

வருணின் குடும்பத்தார் நடப்பதை அமைதியாக அமர்ந்து வேடிக்கை பார்த்தனர்.

" சித்தப்பா நானும் பாலாவும் எங்க மருமகளை பார்க்க வந்தோம். சின்ன வயசுல பாத்தது. அதான் எப்பிடி இருக்கானு பாத்துட்டு போலானு வந்தோம்" என்றார் அந்த நரசிம்மன்.

" நம்ம கார்த்திக்கும் கீதாவும் ஒரே படிப்பை தான் படிச்சிருக்காங்க. அவங்க ரெண்டு பேரும் வாழ்க்கைல ஒன்னு சேந்தா நல்லா இருக்கும்னு நாங்க நெனச்சோம். ஆனா விதி வேற கணக்குல போட்டுருச்சு" என்று அவரை தொடர்ந்து கூறினார் பாலா என்பவர்.

அதற்கு மேல் பொறுக்க முடியாமல் " நீங்க வந்த விஷயம் முடிஞ்சுச்சுனா கிளம்புறிங்களா? எங்க சம்பந்தி வீட்டுக்காரங்க வந்திருக்காங்க. எங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கு" என்றார் அபிராமி கணீர் குரலில்.

அவரது குரலிலேயே அவருக்கு இந்த குடும்பத்தை பிடிக்கவில்லை என்று அறிந்த கீதா எதுவும் சொல்லாமல் அமர்ந்திருந்தாள்.

" இது நல்லா இருக்கே அபி. ஏதோ பொண்ண உன் கிட்ட வளக்க குடுத்தா நீ என்னவோ அவள பெத்தவ மாதிரி பேசுற?? என்ன இருந்தாலும் நாங்க அவளுக்கு ரத்த சொந்தம்., நீ மூனாவது மனுஷி தான்" என்றார் அந்த

பாலாவின் மனைவி. இதை கேட்டு கீதா திடுக்கிட்டாள். அவள் என்றுமே அபிராமியை யாரும் அவமதிக்க அனுமதிக்கவே மாட்டாள்.

" அதான அக்கா., நீ பாத்து வச்ச மாப்பிள்ளைய தான் கட்டணும்னு நீ எப்பிடி எங்க குடும்பத்து வாரிசுக்கு ஆர்டர் போடுவ?? ஏதோ பெரிய மாமா உன் புருஷன வளத்தவருங்கிறதால உங்கள விட்டு வச்சா கடைசில எங்க வீட்டுல இருந்து எங்களையெ வெளியே கிளம்ப சொல்லுவியா நீ?? பொண்ண வளத்துருக்கோம்னு சொல்லி அவ பேருல இருக்கிற சொத்த அடையனும்ங்கிறது தான் உங்க ப்ளான்" என்று நரசிம்மனின் மனைவியும் கூற பொறுமையை இழந்த கீதா சோஃபாவில் இருந்து எழுந்தாள்.

அவளையே அந்த விசித்திர குடும்பத்தினர் பார்த்து கொண்டிருந்தனர்.

எழுந்தவள் " இனிமே ஒரு வார்த்தை என்னோட அபிம்மா பத்தியோ அங்கிள் பத்தியோ நீங்க யாராச்சும் பேசுனா வயசுல பெரியவங்கனு கூட பாக்க மாட்டேன். சோ நான் மரியாதை இல்லாம பேசுறதுக்கு முன்னாடி நீங்களா இடத்தை காலி பண்ணுங்க" என்றாள் சீற்றம் நிறைந்த குரலில்.

" கீதாம்மா நாங்க சொல்ல வர விஷயத்தை கொஞ்சம் கேளுடா" என்று சமாளிக்க பார்த்தவர்களை எந்த தயவு தாட்சண்யமுமின்றி பார்த்தவள் " வெளியே போங்கனு டீசண்டா சொன்னா புரியாதா உங்களுக்கு?? என் வீட்டுல இருந்துட்டு என்னோட அப்பா அம்மாவையே நீங்க கேவலமா பேசுவிங்க., நான் அத பாத்துட்டு சும்மா இருக்கணுமா?? மரியாதையா கௌம்புறிங்க" என்றாள் கோபத்துடன்.

அவள் கூறியதை கேட்டு ஆத்திரமடைந்த ஐவரும் எழுந்து வெளியே செல்ல அவர்களை பார்த்து " ஹலோ இந்த குப்பைய யாரு எடுத்துட்டு போவாங்க?" என்று சொல்லிவிட்டு அவர்களை நோக்கி அவர்கள் வாங்கி வந்தவற்றை வீசி விட்டு தன் அறைக்கு சென்றாள்.

அவர்கள் அதை எடுத்து கொண்டு கோபத்துடன் சென்றதை கலக்கத்துடன் பார்த்து கொண்டு இருந்த அபிராமியின் தோளை பற்றிய சக்தி எதற்கும் பயப்பட வேண்டாம் என்று தைரியம் அளித்தார்.

வருண் தான் கீதாவை சமாதான படுத்த வழியறியாது தவித்தான்......